செய்திக் குறிப்பு எண்–175 நாள்– 24.11.2006

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த குழு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஆறாவது கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (24.11.2006) காலை 11.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு.கோ.க. மணி (பா.ம.க.), திரு சி.கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), திரு வை. சிவபுண்ணியம், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்) திரு எச்.அப்துல் பாசித், திரு. கு.செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் திரு மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

22.11.2006 அன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் முடிவு செய்தவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள டிக்சன் நிறுவனத்தினரிடம் தொழில் நுட்ப வல்லுநர் குழு பேச்சுவார்த்தை நடத்தியது. டிக்சன் நிறுவனம் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு, ஏற்கனவே விலைப் புள்ளியில் கொடுத்திருந்த விலையினை குறைத்து, ரூபாய் 2740 என ஒப்புக் கொண்டு, ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளது. இதன் அடிப்படையில் மற்ற ஒப்பந்தக் காரர்களை அழைத்து இதே விலைக்கு அவர்களும் தர முடியுமா என்று கேட்ட போது நான்கு நிறுவனத்தினர் மறுத்து விட்ட காரணத்தால், எஞ்சிய நான்கு நிறுவனங்களான ஏர்விஷன் பிரைவேட் இந்தியா லிமிடெட், எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட், வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் ஆகியோரை மட்டும் அழைத்துப்

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அந்த நான்கு நிறுவனங்களும், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ரூ. 2740 என விலை நிர்ணயம் செய்ய ஒப்புக் கொண்டு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளன.

கொள்முதல் குழு பேச்சுவார்த்தை நடத்தி இறுதி செய்துள்ள ஒரு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டியின் விலை ரூபாய் 2740 என்பதை ஏற்றுக் கொள்வதென இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

குறைந்த பட்ச விலையான ரூ. 2740 என்று தெரிவித்த டிக்சன் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஒன்பது இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், அந்த நிறுவனம் மூன்று மாதக் காலத்திற்குள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திடமிருந்து ஆறு இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மூன்று இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும் முடிவெடுக்கப் பட்டது. இந்த வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை அந்தந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன், மற்றும் அவர்கள் வழங்க ஒப்புக் கொண்ட எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்றைய கூட்டத்தில் ஒருமனதாகப் பேசி முடிவெடுக்கப்பட்டது.

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9